சிவமயம்

# ஓம்

# "ஆங்கில ஜோதி"

## நினைவு மலர்

அமரர்

## திரு. குமாரசாமி கணேசன் B.A

**IN MEMORY OF**

**LATE.MR. KUMARASAMY GANESAN**

**27.11.2005**

சிவமயம்



# "ஆங்கில ஜோதி"
## நினைவு மலர்

அமரர்

## திரு. குமாரசாமி கணேசன் B.A

IN MEMORY OF

LATE.MR. KUMARASAMY GANESAN

27.11.2005

# சமர்ப்பணம்

எமது அன்புத் தெய்வத்தின்
திருப்பாதங்களுக்கு இந்நூல்
சமர்ப்பணம். மனிதருள் மாணிக்கமாய்
அன்பு நிறைந்த பேரொளியாய்
இன்சொல் பேசி, அன்புடன் எம்மைப்
பேணிக்காத்து, பண்புடனும்,
பாசத்துடனும், நேசத்துடனும்
இன்முகத்துடனும் வாழ்வாங்கு
வாழ்ந்து இன்று வானுறையும்
தெய்வமாகிவிட்ட எமது அன்புத்
தந்தையின் திருப்பாதங்களிற்கு
இம்மலரினைக்
காணிக்கையாக்குகின்றோம்.

மனைவி,
பிள்ளைகள், மருமகள்,



மண்ணுலக
வாழ்வில்
04.08.1929

வானுறையும்
தெய்வமாய்
27.10.2005

அமரர்

# திரு. குமாரசாமி கணேசன் B.A

அவர்கள்

திதி - அபரபட்ஷதசமி

## அமரர் குமாரசாமி கணேசன்
### அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

தென் கிழக்கு ஆசியாவில் வந்தாரை வாழவைத்த, நீர்வளமும், நிலவளமும் இயற்கை வளமும், சீர்செறிந்த மலாயா நாட்டில் பினாங் என்னும் சமஷ்டி இராச்சியத்தில் பகாங் என்னும் மாநிலத்தில் சைவ வேளாண்குலத்தில் தோன்றிய வைத்திலிங்கம் குமாரசாமிக்கும் அருணாசலம் இராசம்மா தம்பதிகளுக்கும் மூத்த புதல்வனாக 04.08.1929 இல் திரு. குமாரசாமி கணேசன் அவதரித்தார்.

பெற்றோர்கள் மனம் மகிழ உற்றோர்கள் பார்த்து உவக்க சிறுபிள்ளை பராயத்தில் கொள்ளை அழகோடு, பொலிந்து வளர்ந்தார். மாமனார் சிவகுரு மாமியார் சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் பாரிய குடும்பப் பிணைப்பின் பாசமழையில் நேசத்துடன் வளர்ந்தார்.

இவருடைய தந்தையார் திருவாளர் குமாரசாமி மலாயா நாட்டில் உதவி வைத்திய அதிகாரியாக உழைப்பால் உயர்ந்து உருவத்தில் சிறந்து தழைத்து நின்றார். இவரின் இரண்டாவது மகளாக லீலாவதி 24.02.1931 ஆம் ஆண்டு பிறந்தார். தந்தை, தாயின் இரு கண்களாக தழைத்து வளர்ந்து வந்தனர். இருவரும் ஆரம்பக் கல்வியை மலாயா நாட்டில் ஏற்றத்துடன் கற்றனர்.

இந்நிலையில் 2 ஆம் உலக யுத்தம் வெடித்தது. இதன் பயனாக இலங்கையர் பலரும் யுத்த பீதி காரணமாக தங்கள் பிள்ளைகளைப் பாதுகாக்கும் நோக்குடன் மீண்டும் இலங்கை திரும்பினர். யுத்தத்தின் தாக்கம் காரணமாய் திரு. குமாரசாமி அவர்களும் தனது மனைவி

பிள்ளைகளுடன் இலங்கை திரும்ப விரும்பினார். ஆனால் மாமன். மாமி சிவகுருவின் பாசப்பிணைப்பில் இருந்த திரு. கணேசன் அவர்களை அவர்கள் தங்களுடன் மலாயாவில் இருக்க வேண்டியதன் பெறுபேறாக திரு. குமாரசாமி தம்பதிகள் தங்கள் செல்வப்புதல்வி லீலாவதியுடன் 1939 ஆம் ஆண்டு இலங்கை திரும்பினர். இலங்கை திரும்பிய தந்தையார் சில காலம் வட்டுக்கோட்டையில் வாழ்ந்து இறந்தார்.

மாமனார் சிவகுருவின் அரவணைப்பில் வாழ்ந்த திரு கணேசன் தனது ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்து சீனியர் கேம்பிரிட்ஜில் தேர்ச்சி பெற்றார். இவர் கல்வியுடன் மாத்திரம் நின்று விடாது சாரண இயக்கம், படம்பிடித்தல், விளையாட்டு "குவிஸ்" குறுக்கு எழுத்து போட்டிகளில் கலந்து மாணவ சமுதாயத்திற்கு ஓர் முன்னுதாரணமாய் விளங்கினார். தனது மேல்படிப்பைத் தொடர இலங்கை திரும்பி வந்த இவர் அப்பொழுது இலங்கையில் பட்டப்படிப்பைத் தொடர வசதிகள் குறைவாக இருந்தமையினால் மீண்டும் 1952 ஆம் ஆண்டு இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான "கல்கத்தா" மாநகரில் "சென் போல்ஸ்" பல்கலைக்கழக கல்லூரியில் தனது உயர் பட்டப் படிப்பைத் தொடர்ந்தார். இதன் பயனாக "கலைமாணி" பட்டம் பெற்றார். பட்டம் பெற்று இலங்கை திரும்பிய அன்னார் 11.06.1956 ஆம் திகதி இலங்கையின் மத்திய மாகாணத்தில் "மாத்தளை" என்னும் நகரில் முன்னணிப் பாடசாலையாகிய "கிரைஸ் சேர்ச்" கல்லூரியில் தனது ஆசிரியர் தொழிலை ஆரம்பித்தார்.

படிப்பால் உயர்ந்த உருவத்தில் சிறந்த பருவத்தில் தழைத்து நின்ற திரு.கணேசன் அவர்களை உலக வழமை என்ற கருமம், திருமணமாய் பெருமையுடன் பொருத்தியது. இவ்வேளை பெருமைகள் பல பொருந்திய இலகுப்பிள்ளை கனகரத்தினம் சொர்ணமலர் தம்பதிகளின்

மகளான செல்வி ஜெயமணி அவர்களைத் தன் இனிய மனையாளாக 21.03.1957 இல் மாண்புடன் திருமணம் செய்து கொண்டார்.

திருமண வாழ்வில் நலம் பல கொண்டு வளம் பல கண்டு. செழுமை பொருந்திய குடும்பமாக மிளிரச் செய்தார். இல்லற வாழ்வின் நல்லற வினையால் திருநலம் நிறைந்த பிள்ளைகள் எழுவரை வாழ்வில் நல்கலமாக கண்டார். வத்ஷலா, ரஞ்ஜிற் விஜிற் சஷீலா, அஜிற், சந்திரஜிற், லக்ஷ்மிலா ஆகிய நன்மக்கள், இவர் சற்புத்திரர்களாக, அவனியில் தோன்றினர்.

ஆங்கில மொழித்திறனும், ஆங்கில பண்பும் சிந்தையில் சேர இப்பருவத்தில் புத்திமானாகவும், சக்திமானாகவும், பாடசாலை சமூகத்தில் உயர்ந்தார். இவர் சாரணிய இயக்கத்தில் காட்டிய ஈடுபாடு காரணமாக பாக்கிஸ்தானில் 1961 ஆம் ஆண்டு நடைபெற்ற "உலகச் சாரணிய ஜம்பூரிக்கு" இலங்கைப் பிரதிநிதியாக தெரிவுசெய்யப்பட்டார். "திரி சாரணத் தலைவராகக்" கலந்து கொண்டார். அத்துடன் அல்லாமல் தனது ஓய்வு நேரத்தில் இயற்கைக் காட்சிகள் உட்பட, மாத்தளை மாநகரின் எந்தப் பொது வைபவங்களிலும் முதன்மை புகைப்பட கலைஞராக விளங்கினார். இதன் காரணமாய் பல பரிசில்களும் பெற்றார்.

1963 ஆம் ஆண்டு, மாத்தளை நகரில் மற்றுமோர் புகழ் பெற்ற "சென் தோமஸ் கல்லூரிக்கு" இடமாற்றம் பெற்றார். 03.08.1984 இல் ஓய்வு பெறும் வரை அக்கல்லூரியிலேயே ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார். இடம்பெயர்வு காலத்தில் வட்டு இந்து கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றினார். தாயார் 28.11.1971 இல் அமரத்துவம் அடைந்தார்.

திரு. கணேசன் அவர்கள் "கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்ற உலகத்தோர் உரைக்கேற்ப தம் அருமைப் பிள்ளைகளுக்கு உயர்வும் ஏற்றமும் உருவாக உழைத்தார். காலத்தால் அழியாத கல்வி, தொழில் கருத்தனைத்தை கருத்துடனே அவர்கட்கு நல்கி, வாழ்க்கையில் அவர்கள் உயர ஏற்றத்தை தந்தார்.

இவ்வகையில் இவரின் முதற்பிள்ளை வத்ஷலா, உயர்கல்வி பெற்று, அளுத்கமையிலும் பின்னர் பலாலி பயிற்சிக் கல்லூரியில், ஆங்கில பயிற்றப்பட்ட ஆசிரியையாகப் பயிற்சி பெற்று ஊர்காவற்துறை சென் அந்தனிஸ் கல்லூரி "யாழ்ற்றன் கல்லூரி" இல் கடமையாற்றி தற்பொழுது வட்டு இந்துக்கல்லூரியில் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டு வருகிறார்.

இரண்டாவது புதல்வன் ரஞ்ஜிற் யாழ். சென்றல் கல்லூரியில் கல்வி கற்று ஹோட்டல் முகாமைத்துவப் பயிற்சி பெற்று, முதலில் சிங்கப்பூரிலும் தற்போது பிரான்சு நாட்டிலும் தொழில் புரிந்து வருகிறார். திருமண வாழ்வில் செல்வி. விஜயராணியை மணந்து இல்லற வாழ்வில் இனிது வாழ்ந்து வருகிறார்.

மூன்றாவது புதல்வன் விஜிற் யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி பயின்று குளிர்சாதன முகாமைத்துவப் பயிற்சி பெற்று சவுதி அரேபியாவிலும் சிங்கப்பூரிலும் இந்தியாவிலும் தொழில் புரிந்து தற்போது "விஜி ஹை கூல் எஞ்ஞினியர்ஸ்" என்ற நிறுவனத்தை வட்டுக்கோட்டையிலும் மானிப்பாயிலும் நடாத்தி வருகின்றார்.

நான்காவது அருமைப்புதல்வி சஷீலா தனது கல்வியை, வட்டு திருஞானசம்பந்த வித்தியாலயத்தில் கற்று தாய் தந்தையருக்கு உதவியாகச் செயல்பட்டு வருகின்றார்.

அடுத்த புத்திரன் அஜிற் தனது கல்வியை வட்டு திருஞானசம்பந்த வித்தியாலயம் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் கல்வியைப் பெற்று புகைப்படத்துறையில் முன்னணிப் படப்பிடிப்பாளராக "அஜிற் போட்டோ" என்னும் படக் கலைஞராக மிளிர்ந்து வருகிறார். யாழ் மாவட்டத்தில் சிறியோர் முதல் பெரியோர் வரை அவரை அறிய முடியாதவர்கள் இருக்க முடியாது.

ஆறாவது புதல்வனான சந்திரஜிற் என்பவர் யாழ்ப்பாணக் கல்லூரியில் உயர் கல்வி பயின்று தற்பொழுது இங்கிலாந்தில் தொழில் புரிந்து வருகின்றார்.

கடைசி மகளான லக்ஷ்மிலா யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி பயின்று கணனித்துறையில் DIP.COM.SC.(U.K,CAM BRIDGE), ADCS IN.COM. SC.(UK.PORTS MOUTH), DIP. IN AIRLINE TIK.RST & MKT (IADA) & DIP IN HR (CMB.UNI) பட்டம் பெற்று. முகாமைத்துவப்பயிற்சி பெற்று "வேட்சுஷா சொவ்ற்வெயர்" (S/W.Eng.Virtuso) என்னும் கம்பனியில் கொழும்பில் வேலை செய்து வருகின்றார்.

திரு. கணேசன் அவர்கள் வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பின் சிறிது காலம் மாத்தளையில் பகுதி நேர ஆங்கில ஆசிரியராகப் பணி புரிந்தார். பின்னர் தன் கிராமத்தில் சேவை செய்ய வேண்டும். ஆங்கிலக் கல்வியில் பின் தங்கியுள்ள தன் கிராமமும் ஆங்கிலக் கல்வித்துறையில் மேம்பட வேண்டும் என்ற சீரிய சிந்தனையை கருத்தில் கொண்டு தன் ஆங்கிலப் புலமையை வேண்டியோர்க்கு பகிர்ந்தளித்தார். இதன் பயன்பாடாக சங்கானை மேற்கு சைவப்பிரகாச வித்தியாலயம் மெய்கண்டான் வித்தியாலயம், அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் போன்ற பல சிறிய பெரிய பாடசாலைகளில் உத்தியோகப்பற்றற்ற

முறையில் ஆங்கிலக் கல்வியைப் பயிற்றுவித்தார். அத்துடன் நின்றுவிடாமல் பல அரச சார்பற்ற ஸ்தாபனங்களில் மொழிபெயர்ப்பும் பகுதி நேரத்தில் செய்து கொடுத்தார். அத்துடன் பல அரச மட்ட திணைக்களங்களிற்கு, உயர் மட்ட அதிகாரிகளிற்கு ஆங்கில அறிவை மேம்படுத்தும் நோக்கில் பல கருத்துரைப் பயிற்சிகளை நடத்தினார். இதன் மூலம் அவரின் ஓய்வு காலத்தை பயனுள்ளதாக உருப்படுத்தினார். சிறிது காலம் நோய்வாய்ப்பட்டு, படுக்கையில் இருந்தார். இருந்த போதிலும், தனது சிறு வயது முதல் பொழுது போக்காக குறுக்கு எழுத்து போட்டியில் ஆர்வம் காட்டி இறப்பதற்கு முதல் நாள் வரை அவற்றில் மனம் செலுத்தி வந்தார்.

புன்னகை தவழும் வதனம், மெல்லிய உடல் வாகை, என்றும் தளராத நிமிர்ந்த நடை, வயதிற்கேற்ப ஏனையோருக்கு காட்டும் மரியாதைப் பண்பு உள்ளம் அள்ளும் சொல், வசனம், கொண்ட திரு. கணேசன் அவர்கள் 27.10.2005 அன்று அதிகாலை 4.00 மணிக்கு அமரத்துவம் அடைந்தார். "வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று வானுறையும் தெய்வத்துள் ஒன்றாகி விட்ட" அமரரின் ஆத்ம சாந்திக்கு என்றும் பிரார்த்திப்போமாக.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

# அமரர் குமாரசாமி கணேசன் அவர்களின் கண்ணீர்க்காணிக்கை

அமரர் குமாரசாமி கணேசன் அவர்கள் நான் 1999 ஆம் ஆண்டு யா/ சங்கானை மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலையின் அதிபராக கடமையாற்றும் போது எமது பாடசாலைக்கு ஓர் ஆங்கில ஆசிரியர் தேவையாக இருந்தது. இத் தேவையை நிவர்த்தி செய்வதற்கு பல்வேறுபட்ட நண்பர்களுடன் தொடர்பு கொண்டும் பெற்றுக் கொள்ளமுடியவில்லை. கடைசியில் எமது பாடசாலை பழைய மாணவர்சங்க செயலாளர் திரு. சங்கர் அவர்கள் இவ்வாசிரியரை எமது பாடசாலையின் ஆங்கில ஆசிரியராக இணைத்தார். 1999-2002 வரை எமது பாடசாலையில் ஆங்கிலக் கல்வியை வளப்படுத்தியவர் என்று கூறுவதில் மிகையாகாது.

இவர் என்னிலும் பார்க்க மிகவும் வயது மூத்த ஆசிரியராவார். நல்ல உள்ளம் உடையவர். கடமை தவறாதவர். இவருக்கு நாங்கள் கொடுக்கும் சம்பளம் மிகவும் குறைவானது. அவரது தேவையை ஈடுசெய்ய முடியாததாக இருந்தபோதும் தொடர்ந்து காலை 8.30 மணிக்கு பாடசாலைக்கு வருகை தந்து 2.30 வரை எங்களுடன் ஒத்துழைத்த பெரியார். இவர் சம்பளத்திற்காக தொழிலுக்கு வரவில்லை. தனது சேவை எமது சமூக மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்ற நல்நோக்கு உள்ள பெரியார். லீவு எடுப்பதென்றால் 2 தினங்களுக்கு முன்னரே அறிவிப்பார். ஆனால் ஒரு நாள் மிக அவசரமான லீவு தேவையென தனது உறவினரின் வாகனத்தில் காலை 8.30 மணிக்கு வந்து என்னிடம் தேவையைக் கூறி அனுமதி பெற வந்தார். நான் அவரைப்பார்த்து ஏன் சேர் இங்கு வந்தீர்கள் உங்கள் தேவையை உடன் செய்யலாம் என்று நான் கூற அவர் சொன்னார் என்னை நம்பி மாணவர்கள் வருவார்கள் அவர்களுக்கு நீங்கள் மாற்று ஒழுங்கு செய்யவேண்டும் என்பதற்காக வந்தேன் எனக் கூறினார். இதிலிருந்து அவரது குணத்தை நாங்கள் அறிய முடிகிறது.

இவர் தனது பதவிக் காலத்தில் பல்வேறுபட்ட பதவிகளை வகித்தவர். மாத்தளை மாவட்ட சாரண ஆணையாளராக கடமையாற்றி பல்வேறுபட்டங்களை பெற்றவர். இனிமையானவர். யாருக்கும் உதவி செய்யக் கூடியவர். அன்பே உருவானவர். எப்பொழுதும் புன்சிரிப்புடன் காணப்படுவார். இவ்வாறான நற்குணங்களை உடைய உத்தமர் எங்களை எல்லாம் விட்டு அமரராகி விட்டார். அவர் மறைந்து விட்டார். அவரது பணி என்றும் நிலைத்து நிற்கும். அவரது கல்விப்பணி என்றும் எங்கள் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும். அன்னாரது மறைவினால் துயருற்று இருக்கின்ற குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்போமாக

***ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!***

திரு. வி. நடராசா
அதிபர்
யா/ பண்ணாகம்
மெய்கண்டான் ம.வி.

- மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரண தன்மையை வெளிப்படுத்துவது தான் கல்வி.
- முதலில் கீழ்ப்படிதற்குக் கற்றுக்கொள். பிறகு கட்டளை யிடும் பதவி உனக்குத் தானாகவே வந்து சேரும்.
- பிரமச்சரியத்தை உறுதியாக அனுஷ்டிக்கிற ஒரே ஒரு காரணத்தாலேயே, எல்லாவிதமான கல்வி அறிவையும் மிகக் குறுகிய காலத்தில் கற்றுத் தேர்ச்சி பெற்றுவிட முடியும்.

# Paying Tribute to a Late Teacher

It is with a deep grieve I pen a few lines in memory of our teacher Mr. Kumarasamy Ganeshan. Though he is no more his image is imprinted in my mind.

Mr.K.Ganeshan a retired teacher from J/Vaddu Hindu Navodaya School, a picturesque hamlet overlooking the vaddukoddai range in Jaffna district passed away at the ripe old ago of seventy six

His Capabilities, devotion for duty, Simple dress, humble manners, tactful handling of students of various characteristics were his unique features. He was a highly respected teacher of our school society. He was never known to have lost his temper on any occasion or used harsh words on any occasion or used harsh words on any student. He was found firm.

He served in many schools in urban and remote educational divisions as a teacher till his retirement in 1984. He had been an active government servant for Years.

Till his death he served society in numerous ways. He treated everyone with love, kindness and humaneness. To those who sought his helps and advice, he was readily available.

Mr.K.Ganeshan was an affable person and popular among friends, colleagues and relatives. His demise will be felt

not only by his family members but also by those who closely associated him.

The sweet experiences we shared with him will never be erased from our hearts. His memories are still imprinted in the hearts of his students and teachers. We whole heartedly pray the Almighty God to rest his soul in peace.


*Principal S. Ramalingham*
*J/Vaddu Hindu Navodaya College*
*Sithankerny .*

# My Daddy.........

**LUXAN................This is the way my BELOVED DADDY used to call me!!!!!!!!!!!!**

**Now where I can hear that voice?????? I can't believe that ......he has gone to his source of soul**
**Yap!!!!! He always used to say *luxan BE PREPARED,***

**When we are ready to go out ..... *He will Say***
***"Doesn't matter if you go one hour early but don't get late even one minute"***



**Your words are lamp to my feet and light for my path**

- **He was always a bright candle light to the entire world**
- **He has earned a lot & lot of good name from**
- **Each & every person in the village or even outsiders**
- **Everyone used to called him as "master…master"**

**I think he is the first person to read the entire morning daily news papers.**
**Also he fills all the puzzles**

**I am so grateful and thankful to my daddy for what he has done for me in every each step in my life**
**More........and........more!!!!**

**Can't even list it here!!!! Because this one page is not enough to tell you all about him**
***Your love is ever before me, and I walk continuously in your truth***

***Thank you***

***Message from his ever loving youngest daughter***
***Lakshy***
***(Luxan)***

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந்
தன்மையினாற் கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே
யிருங்கடல் வையத்து
முன்னம்நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும்
வழிபடு மதனாலே.

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளிபெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங் கெழுந் தருளுவதினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவு
பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊருமுலகுங் கழற
உளறியுமை மணவாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்பிறப்பு உண்டேல்
உன்னை யென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டு நான்
மகிழ்ந்து பாடி
"அறவா' நீ யாடும் போதுன் அடியின் கீழ்
இருக்க" என்றார்.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறி விளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசு முகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்த்தமுகமொன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முக மொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகமொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே.

## முருகன் துதி

காக்கும் கதிரமலைக் கந்தனையே போற்றாமல்
நீர்க்குமிழி போல்வாழ்வை நிலபரமென்றெண்ணி விட்டேன்
இருபுறமும் கரடி புலி யானை இருண்டடைந்த வனந்தனிலே
ஒருவரையுங் காணேனே உச்சியில் சடையிருக்க
உள்ளங் கையில் வேலிருக்க நெற்றியில் நீறிருக்க
நினைத்த வரம் தருவாய்

சூலாயுதங் கொண்டு யமதூதர் வந்தெனைச்
சூழ்ந்து கொண்டால் நான் வேலாயுதா வேலாயுதா
என்று கூப்பிடுவேன் மாளான வள்ளி தெய்வயானையுடன்
மயில் விட்டிறங்கி உன் காலால் நடந்து வரவேண்டுமென் கந்தப்பனே.

# சரஸ்வதி துதி

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை யின்பம் குலவு கவிதை
கூறுபாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ளதாம் பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள் (வெள்ளை)

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்
கோத கன்ற தொழிலுடைத்தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்பமே வடிவாகிடப் பெற்றாள் (வெள்ளை)

# காயத்திரி மந்திரம்

ஓம் பூர் புவ ஸ்வா:
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ நப்ரோ சோதயாத்

# வீரபத்திரர்

அக்குமணி மிக்கசெக் கர்ச்சடை யுமுக்கண்ணு மாயிரங் கமல
முகம் அணிமணிக்குண்டலங் குழைகளுங் குலமலையின
கொழுகுகனகபுயமும்
தொக்குயர் படைக்கலக்கைகளும் மார்பிற்றுலங்கு செம்பொன்னாரமும்
சுருதியுங் கருதரியபரிபுர பதங்களுந்தோன்ற
வந்தெனையாளுவாய்
தக்கனொடுமக்கள் மருமக்கள் பக்கத்திலுறை சதுர்முகன் முதல்
வானவர்தங்கள் கருவங்களதிபக்கம் படச்சிவன் தலைமை
நிலையிட்ட முதல்வா
திக்குலவு சோலையுஞ் சாலையும் பாலிற் செறிந்த பிட்டிப்
பதியில்வாழ் சித்திரவலங்கார பத்ரகாளிக்கன்பு திகழ்வீர
பத்ரகுருவே.



ஓம்

# வாழ்வு அநித்தியம் திருமந்திர விளக்கம்

உலகில் வாழும் சீவராசிகளை இரு கூறாக உடல்வேறு, உயிர்வேறாகப் படைத்திருப்பதைக் கீழ்க்காணும் திருமந்திரம் விளக்குகின்றது.

123. அத்தன் அமைத்த உடல் இருகூறினிற்
சுத்தம் தாகிய சூக்குமம் சொல்லிடிற்
சத்தம் பரிசம் ரூபம் ரசகந்தம்
புத்தி மனம் ஆங்காரம் புரியட்ட காயமே.

சடப்பொருளான உடல் அழிந்து அற்றுப்போகும் தன்மை உடையது. சூக்குமப் பொருளான உயிர் அழியாத மெய்ப்பொருள். தாயின் கருவில் மிதித்த இறைவனின் கமலப் பாதத்திலிருந்து எழுந்த ஆத்மா எனப்படும். உயிரே உடம்பைப் படைத்துக் காத்து, வளர்த்து அழிக்கும் மெய்ப்பொருள்.

103 முட்டை பிறந்தது முன்னூறு நாளினிலே
இட்டது தானில்லை ஏதேனும் ஏழைகாள்
பட்டது பார்மணம் பன்னிரண்டு ஆண்டினிற்
கெட்டது எழுபதில் கேட்டு அறிவீரே.

உயிரானது தான் முற்பிறப்பில் செய்த வினைப்பயன்படி ஒரு தாயின் கருவில் விழுந்து பத்துமாத காலத்தில் ஓர் உடம்பைப் படைத்து உலகில் பிறக்கும். உயிரை ஏழைகளான நாம் உண்டாக்கி இடவில்லை. பன்னிரண்டு ஆண்டில் ஐம்புலன்களால் விளையும். ஆசைகள் எல்லாம் பர்ணமிக்கும். எழுபதாம் வயதில் ஆசைகளெல்லாம் அற்று அழிந்து விடுவர். பைபிளிலும், (Bible) Life span of mans is three

score and ten என்று கூறுகிறது. எழுபது ஆண்டுகள் 3X20+10 என்று திருமந்திரம் கூறினதையே சொல்லுகிறது.

எமது உடம்புள் இயங்கி நடமாடச்செய்யும் உயிர், குறித்த காலத்தில் உடம்பை விட்டு விலகிவிடும். அதன்பின் உடம்பை மண்ணுக்குள் தாட்டு அல்லது எரித்து விடுவார்கள். பட்டினத்தார் கீழ்க்காணும் பாடலால் விளக்குகிறார்.

விட்டு விடப்போகுது உயிர் விட்டுவிட்டால்
சுட்டு விடப்போகிறார் சுற்றத்தார்
பட்டது பட்டு எந்நேரமும் சிவனை
ஏற்றுங்கள் போற்றுங்கள் சொன்னென் அது வேசுகம்

சீவனைத்தான் சிவனென்று திருமந்திரமும், யோக சூத்திரமும், பகவத்கீதையும், நற்சிந்தனையும் கூறுகிறது. பிராண வாயுவை உகாரத்துக்கு ஏற்றி ஓமெனும் இறை நாமத்தை ஓதிப் போற்றி செய்யுங்கள். அதுவே இறை இன்பத்தை அளித்து சுகத்தை கொடுக்கும்.

வாழ்வு அநித்தியம் என்பதை விளக்க பின்வரும் திருமந்திரம் விரிவாக கூறுகின்றது. இந்த உடம்பில் உள்ள உயிர் எப்போ எங்களை விட்டு நீங்கும் என்று தெரியாது. திருமந்திரத்திலே கூறியபடி

போது சடக்கெனப்போகின்றது கண்டும்
வாது செய்தென்னோ மனிதர் பெறுவது
நீதியுள்ளே நின்று நின்மலன்தாள் பணிந்து
ஆதியை அன்பில் அறிய கில்லார்களே
போது = உயிர்
வாது = உலகப்பிரச்சினைகளைப் பற்றி வாதித்து என்ன பயன்
நீதி = ஆத்மா இயங்கும் சக்கரம்

நாம் எத்தனையோ பிறப்புக்களை எடுத்துக் களைத்து மேலான இன்மானுடப் பிறப்பை பெற்றிருப்பதை மாணிக்கவாசக சுவாமிகள் விளக்கமாகக்கூறுகின்றார்.

புல்லாகிப்பூடாய் புழுவாய் மரமாகி
பல் மிருகமாகிப் பறவையாய் பாம்பாகி
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரராகி முனிவராய் தேவராய்
செல்லாநின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்

ஆகவே பிறப்பில் சிறந்தது மானிடப்பிறப்பு. இப்பிறப்பிலே நாம் பிறந்தபலனை அடையவேண்டும். அப்படி அடையாவிடில் கீழ்காணும் திருமந்திரம் விரிவாக கூறுகின்றது.

திருமந்திரம்

பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற்கரிய பிரான் அடிபேணார்
பெறுதற்கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற்கு அரிய பேறு இழந்தாரே

பிரான் அடி எல்லா உயிர்களுமாய் இயங்குகிறது. உயிர்களைக் காப்பாற்றும் சேவையே இறைவனுக்குச் செய்யும் சேவை.

உலகப்பிரசித்தி பெற்ற ஆன்மஞானி ரமணமகாரிஜியின் திருவாக்கு உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் உணர்ந்து அனுட்டியதே மானிடப்பிறப்பின் நோக்கம்.

"மனிதன் ஆனந்தத்தை நாடுவதில் தவறு ஒன்றுமில்லை. ஏனெனில் எப்பொழுதும் ஆனந்த நிலையில் இருப்பதுதான் அவனுடைய இயல்பு.

ஆனால் உலகப்பொருள்களில் அந்த ஆனந்தத்தைப் பெறலாமென்று நினைப்பது தான் தவறு. அழிவற்ற ஆன்மவஸ்துவில் மனத்தைப் பதியவைப்பதன் மூலமே நாம் நிரந்தரமான ஆனந்தத்தைப் பெறமுடியும்.

திருக்குறள்


266. தவம் செய்வார் தன் கருமம் செய்வார் -மற்றல்லார்
அவம் செய்வார் ஆசையுட்பட்டு

திரு. கணேசன் இவ்வுலகில் ஆங்கில அறிவை வளர்க்க ஆற்றிய சேவை மனித குலத்துக்கும் தனது ஆன்மா ஈடேற்றத்துக்கும் திருவள்ளுவரின் மேற்காட்டிய திருக்குறளின்படி தன் கடமையை தவறாது செய்து பேறு பெற்ற ஆன்ம ஞானி.

## சிந்தனைத் துளிகள்

* 2000ஆம் ஆண்டில் நடைபெற்ற சிட்னி ஒலிம்பிக்கில் அதிக தங்கப்பதக்கங்களைப் பெற்ற நாடு - அமெரிக்கா
* இலங்கையின் தேசிய கீதத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் முது தமிழ்ப்புலவர் மு.நல்லதம்பி
* நத்தை முட்டையின் நிறம் - மஞ்சள்
* உலகிலே அதிக மக்களைக் கொண்ட நாடு - சீனா
* உலகிலே குறைந்தளவு மக்களைக் கொண்ட நாடு - வத்திக்கான்
* இலங்கையின் அழகிய நீர்வீழ்ச்சிகள் - துன்கிந்த, தியலும

# வம்சாவழி



கனகரத்தினம் + சொர்ணமலர்
சுப்பிரமணியம் தவராசா ஜெயமணி ஜெயசிங்கம் செல்வராசா தேவராசா புஸ்பராணி
வைத்திலிங்கம் குமாரசாமி
+
அருணாசலம் இராசம்மா
கணேசன்
லீலாவதி
+
வேர்னன் பெர்னான்டோ
கிர்ஷாந்தா
+
சாமேன்
ஷிராணி
+
டீபால்
செனலா
ஷிவோன்
சான்ரா
+
பிரசன்னா
அனுஸ்கா
தாஷா
கிஷான்
+
துஷிக்கா
கெவான்
வியான்
ஆர்னியா
வத்ஷலா
ரஞ்ஜிற்
+
விஜயராணி
விஜிற்
சஷீலா
அஜிற்
சந்திரஜிற்
லக்ஷ்மிலா



# நன்றி நவிலல்



எமது அன்புத் தந்தை இறைபதம் அடைந்த செய்தி கேட்டு அவருடைய இறுதிக்கிரியையில் பங்குபற்றியவர்களுக்கும் அதற்கு வேண்டிய ஒத்துழைப்பு நல்கியோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவியோருக்கும் இன்று நடைபெற்ற கிரியைகளிலும் ஆன்ம சாந்திப் பிரார்த்தனையிலும் பங்கு பற்றியோருக்கும் தொலைபேசி, தந்தி, தபால் மூலம் அனுதாபம் தெரிவித்த அன்பர்கள் அனைவருக்கும் எம் இதயம் கனிந்த நன்றிகளைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்
மனைவி பிள்ளைகள்,
மருமகள்.

# ACKNOWLEDGEMENT

We thank all our relatives, friends and well wishers who visited, consoled and gave medical advice to our father during his incapacitated days.

We also thank everybody who attended the funeral and sent messages of condolences and placed wreaths.

We regret our inability to thank you individually.

***Mrs. Jeyamani Ganesan Family***

பதிப்பு : கரிகணன் பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம், தொ.பே: 021 222 2717, 4590123